பதிப்புரிமை ஆசிரியருக்கே / All Rights to Author

# GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) அலகுப் பரீட்சை - நகராக்கம்
General Cerificate of Education (Adv. Level) Unit Examination - Urbanization

புதிய பாடத்திட்டம்
*New Syllabus*

புவியியல் I,II
Geography I,II

22 T I,II

## நகராக்கம்

*இரண்டு முப்பது மணித்தியாலம்*
*Two thirty hours*

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்: ..............................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி **I** மொத்தப் புள்ளிகள் [ ]

பகுதி **II** மொத்தப் புள்ளிகள் [ ]

இறுதிப் புள்ளிகள் [ ] **100**

A.Kajan - A.Kajan

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**1.** **1881** காலப் பகுதிக்கும், **2018** காலப் பகுதிக்கும் இடையே, இலங்கையின் நகர சனத்தொகை வளர்ச்சி வேறுபாடு ஏறத்தாள எத்தனை சதவீதமாகும்?
(1) 18% (2) 5% (3) 8% (4) 12% (5) 10% **(.....)**

**2.** பின்வருவனவற்றுள், ஆபிரிக்க வலயத்தில் தாழ்வான நகராக்க மட்டம் கொண்ட நாடாகக் **கொள்ளப்படுவது.**
(1) கொரியா (2) சிங்கப்பூர் (3) மலாவி (4) ஜப்பான் (5) உருகுவே **(.....)**

**3.** இலங்கையின் **ஹொரஸ்பேவ, மஹரகம** என்பன,
(1) கிராம சபைகள் ஆகும்.
(2) மாநகர சபைகள் ஆகும்.
(3) உள்ளூராட்சி சபைகள் ஆகும்.
(4) நகர சபைகள் ஆகும்.
(5) வன பரிபாலன சபைகள் ஆகும். **(.....)**

**4.** உலகளாவிய ரீதியில், தாழ்நிலை நகரமயமாதல் நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் இலங்கையின் **தரநிலை.**
(1) நான்கு (2) ஆறு (3) எட்டு (4) ஐந்து (5) ஏழு **(.....)**

**5.** பின்வருவனவற்றுள், **2050**ஆம் ஆண்டளவில் **100%** நகராக்கத்தை அண்மித்துக் கொள்ளும் நாடுகளின் பட்டியலில் **உள்ளடங்குவன.**
(1) கட்டார், குவைட், க்வாட்லூப், பெல்ஜியம்
(2) சீனா, சிங்கப்பூர், கட்டார், பெல்ஜியம்
(3) டிரிடேட்டுபகோ, பப்புவாநியூகினி, செமேவா, புருண்டி
(4) இலங்கை, மலாவி, பெட்ரல், புருண்டி
(5) உகண்டா, மலாவி, நேபாளம், இலங்கை **(.....)**

**6.** **“மெற்றோபொலிஷ் (Metro polis)”** என்பது,
(1) மத்தியதரைக் கடல் எல்லையின் ஜெனிவா நகரத்திலிருந்து வெலன்சீயா வரையான வலயத்தைக் குறிக்கும்.
(2) உலகின் மில்லியன் நகரங்களைக் குறிக்கும்.
(3) உலகின் பில்லியன் நகரங்களைக் குறிக்கும்.
(4) ஆசிய வலயத்தில் உயர் நகராக்க மட்டத்தைக் காண்பிக்கும் நாடுகளுக்கு வழங்கும் பெயர் ஆகும்.
(5) இலங்கையின் மேல்மாகாணத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டம் ஆகும். **(…..)**

**7.** **2018** புள்ளிவிபரங்களின் அடிப்படையில், இலங்கையின் **நகர சனத்தொகை.**
(1) 18.03%
(2) 19.02%
(3) 18.19%
(4) 20.44%
(5) 18.48% **(…..)**

**8.** பின்வருவனவற்றுள், ஆசியாவில் தோன்றி வளர்ந்த புராதன நதிக்கரை நாகரிகமாக **அமையாதது.**
(1) எகிப்திய நாகரிகம்
(2) மொசப்பத்தேமிய நாகரிகம்
(3) பபிலோனிய நாகரிகம்
(4) குவாங்கோ நாகரிகம்
(5) சிந்துவெளி நாகரிகம் **(…..)**

**9.** அருகில் தரப்பட்டுள்ள படத்தில் **A** என அடையாளம் செய்யப்பட்டுள்ள நகராக்க வலயத்தின் நிறம்.
(1) ரெட் (Red)
(2) கிறீன் (Green)
(3) கோல்டன் (Golden)
(4) ஜெலோ (Yellow)
(5) ப்ளூ (Blue) **(…..)**




**10.** **“நகர்ப் புரட்சி”** என்பது,
(1) நகரங்கள் பெருநகரங்களாக மாற்றமடைதல்.
(2) பெருநகரங்கள் நகர்த் தொகுதிகளாகுதல்.
(3) நகர்த் தொகுதிகள் நகரக் கூட்டுக்களாகுதல்.
(4) கிராமிய வாழ்க்கை முறையிலிருந்து நகர வாழ்க்கை முறைக்கு மாறுதல்.
(5) நகர வாழ்விலிருந்து கிராமிய வாழ்விற்கு மாறுதல். **(…..)**

**11.** இலங்கையின் அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஏழு பிரதான மாநகர சபைகளுள்ளே **உள்ளடங்காதது**.
(1) கடுவல
(2) தெஹிவளை
(3) கல்கிசை
(4) யாழ்ப்பாணம்
(5) கோட்டை **(…..)**

**12.** உலகில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரங்களின் தொகுதி.
(1) மிலான், சூரிச், புதுடில்லி, கொல்கத்தா, சென்னை
(2) கன்பரா, மிலான், லண்டன், றியோடி ஜெனிரோ
(3) றியோடி ஜெனிரோ, லண்டன், கெய்ரோ, அலெக்சாந்திரியா
(4) கன்பரா, பிரேசிலியா, புதுடில்லி, சண்டிகார், இஸ்லாமாபாத்
(5) கன்பரா, மிலான், றியோடி ஸெனிரோ, பரீஸ் **(…..)**

**13.** **15** மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட ஆசிய நகரங்களின் **சரியான** ஒழுங்கு.
(1) மும்பாய், டோக்கியோ, நியூடெல்லி, ஷங்காய்
(2) டோக்கியோ, மும்பாய், ஷங்காய், நியூடெல்லி
(3) மும்பாய், நியூடெல்லி, ஷங்காய், டோக்கியோ
(4) டோக்கியோ, ஷங்காய், நியூடெல்லி, மும்பாய்
(5) ஷங்காய், டோக்கியோ, மும்பாய், நியூடெல்லி **(…..)**

**14.** இலங்கையின் நகராக்கப் பிரச்சினையை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய **பிரதான** செயற்பாடு.
(1) தேசிய பௌதிகத் திட்டமிடலை நகரம் நோக்கி விரிவுபடுத்தல்.
(2) நகரங்களை நோக்கி மேம்பாலப் போக்குவரத்துத் திட்டங்களை அமுல்ப்படுத்தல்.
(3) தேசிய பௌதிகத் திட்டமிடலை மேற்கொள்ளல்.
(4) திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை திறன்பட அமைத்தல்.
(5) கிராமப்புறங்களை விருத்தி செய்தல். **(…..)**

**15.** நிர்வாக நியதிகளுக்குள் உள்வாங்கப்படாது, இலங்கையின் மறைக்கப்பட்ட நகரமயமாக்கல் மட்டம்.
(1) 18.03%
(2) 29.02%
(3) 39.0%
(4) 50.44%
(5) 48%
**(…..)**

**16.** நகர மையங்களின் படிமுறை அமைப்பை **ஏறுவரிசை** ஒழுங்கில் சரியாகக் காட்டும் தெரிவு எது?
(1) நகரம், தலைநகரம், பெருநகரக் கூட்டு, பெருநகரம்.
(2) நகரம், பெருநகரம், நகரக் கூட்டு, தலைநகரம்.
(3) தலைநகரம், நகரம், பெருநகரம், நகரக் கூட்டு.
(4) நகரக்கூட்டு, பெருநகரம், தலைநகரம், நகரம்.
(5) நகரம், நகரக் கூட்டு, தலைநகரம், பெருநகரம். **(…..)**

**17.** இலங்கையின் மிகப்பெரிய **மற்றும்** மிகச் சிறிய மாவட்டங்கள் இரண்டினை, அவற்றின் நகர சனத்தொகையின் அடிப்படையில் **முறையே** சரியாகக் காட்டு விடை யாது?
(1) கொழும்பு, ஹம்பாந்தோட்டை
(2) கொழும்பு, கேகாலை
(3) ஹம்பகா, ஹம்பாந்தோட்டை
(4) கொழும்பு, நுவரெலியா
(5) கண்டி, கேகாலை **(…..)**

**18. 2012** குடித்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில், இலங்கையில் நகர சனத்தொகையைக் **கொண்டிராத** நான்கு மாவட்டங்களும் எவை?
(1) முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, பொலநறுவை.
(2) முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொலநறுவை, மொனராகலை.
(3) கிளிநொச்சி, முல்லைத்தீவு, இரணத்தினபுரி, மட்டக்களப்பு.
(4) முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, நுவரெலியா.
(5) பொலநறுவை, மொனராகலை, பதுளை, நுவரெலியா. **(…..)**

**19.** எதிர்வரும் **2030 – 2050** காலகட்டத்தில், சர்வதேச ரீதியாக குறைந்தளவிலான நகராக்க அதிகரிப்பை காட்டுமென எதிர்வுகூறப்பட்டுள்ள வலயமாக **அமைவது.**
(1) ஆசிய வலயம்
(2) தென் அமெரிக்க வலயம்
(3) இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் வலயம்.
(4) ஓசானிக் வலயம்
(5) ஐரோப்பிய வலயம்
**(…..)**

**20. 2020** ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் சேரிப்புறங்களில் வாழும் மக்கள் தொகையாகக் கணிப்பிடப்பட்டுள்ள அளவு. (ஏறத்தாள)
(1) 590 Million
(2) 700 Million
(3) 390 Million
(4) 411 Million
(5) 889 Million
**(…..)**

- A.Kajan - A.Kajan

## பகுதி / Part – II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** 1) '**நகரமயமாதல்**' என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

2) குறித்வொரு நாட்டின் நகரமயமாதல் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்யும் **மூன்று** காரணிகளையும் அடையாளம் செய்க.

3) மேலே, வினா **இல. 2** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்டுள்ளவற்றில், யாதாயினும் **இரண்டினைத்** தெரிந்தெடுத்து சுருக்கமாக விளக்குக.

4) இலங்கையின் நகராக்க வளர்ச்சி மட்டம் குறைந்து செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**02.** 1) இலங்கையில், அதிக நகரமக்கள் தொகையைக் கொண்ட முதல் **நான்கு** மாவட்டங்களையும் பெயரிடுக.

2) நகர முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் **நான்கு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

3) நகரங்களில், சேரிகள் **மற்றும்** அத் துமீறிய குடியிருப்புகள் அமைவதனால் ஏற்படத்தக்க **மூன்று** விளைவுகளை சுருக்கமாகப் பரிசீலிக்குக.

4) நகரங்களில் சேரிகள் மற்றும் அத்துமீறிய குடியிருப்புகள் அமைவதனால் ஏற்படத்தக்க பிரச்சினைகளை நிவர்த்திசெய்து கொள்வதற்கு மேற்கொள்ளத்தக்க உபாய நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**03.** 1) கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் பின்வரும் **மெகாபொலிஷ்** நகரங்களைச் **சரியாகக்** குறித்துப் பெயரிடுக.
(ஜகார்த்தா, றியோடி ஜெனிரோ, மணிலா, மொஸ்கோ, டோக்கியொ, பீஜிங்)



2) உலகின் நகராக்கத்தில் மாற்றமடைந்து வருகின்ற **மூன்று** பாங்குகளை விவரிக்குக.

3) இலங்கையின் கொழும்பு நகரத்தில் உயர்ந்தளவு நகராக்க மட்டம் நிலவப் பெறுவதற்கான **நான்கு** காரணிகளை விவரிக்க.

4) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும், நகராக்கம் சார்ந்த **நான்கு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

**(20 புள்ளிகள்)**

**04.** 1) நகரமயமாக்கத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் சுட்டியைக் குறிப்பிடுக.

2) இலங்கையின் நகரமயமாதலுடன் தொடர்புடைய விமர்சனங்களும் - போக்குகளும் பற்றிச் சுருக்கமாகக் கருத்துரைக்குக.

3) உலக நகராக்கம் தொடர்பான, **நான்கு** புதிய போக்குகளை விவரிக்குக.

4) நகரங்களின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் பற்றி மதிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 3 | 11 | 4 |
| 2 | 3 | 12 | 4 |
| 3 | 4 | 13 | 4 |
| 4 | 5 | 14 | 5 |
| 5 | 1 | 15 | 5 |
| 6 | 2 | 16 | 1 |
| 7 | 5 | 17 | 2 |
| 8 | 1 | 18 | 2 |
| 9 | 2 | 19 | 4 |
| 10 | 4 | 20 | 5 |